குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:117 -ஐப்பசி-15--தி.பி.2056   நவம்பர்—1--- பொ.ஆ.2025

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

“தமிழால் வாழும் யான் தமிழுக்காகவும் வாழ்தல் கடன் என வள்ளுவர் நெறியில், காந்தியடிகள் காட்டிய வழியில் செயல்புரியத் திட்டமிட்ட என்னை இந்தியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறைப்படுத்திவிட்டனர். செந்தமிழ் காக்கப் புறப்பட்ட எனக்குச் சிறைவாழ்வு கிடைத்துவிட்டது. சிறைவாழ்வுமட்டுமா? என் பேராசிரியர் பதவியையும் இழக்கவேண்டி நேரிட்டுள்ளது. பேராசிரியர் பதவியால் திங்கள்தோறும் பெற்றுவந்த வருவாயும் நின்றுவிட்டது. என்னைக் கல்லூரியில் வைத்திருந்தால் கல்லூரிக்கு அரசினர் உதவி கிடைக்காதாம்ஆகவே, நான் கல்லூரியில் பணியாற்றுதல் கூடாதாம்!”

‘குறள்நெறி’ இதழில் பேராசிரியர் சி.இலக்குவனார்

பேராசிரியர் இலக்குவனர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்

அரசாங்கத்தின் பழிவாங்கும் படலம் ஆரம்பம்

மதுரை, ஜூன் 28- கல்லூரிகளில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டுமென்றும் என்று அரசினரை வலியுறுத்தி பெரு நடைப் பயணம் மேற்கொண்டிருந்த பேராசிரியர் இலக்குவனர் மதுரை தியாகராசர் கல்லூரியில் இருந்து விலக்கப் பட்டார். அரசாங்கம் பழிவாங்கும் நடவடிக்கையாக இவ்வாறு விலக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

‘’சிறைசெல்லும் புலவர்சிலர் வேண்டும் இன்று
செந்தமிழின் உயர்வுதனை வேண்டி நின்று
முறைசெய்யப் பதவிதனை இழப்ப தற்கும்
முனைந்துவரும் புலவர்சிலர் வேண்டும் இன்று’’

--வீறுபாவலர் முடியரசனார்

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்
பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

பணிநீக்கம் ஒரு தொடர்கதை--- [1952-இல் விருதுநகர்; 1965-இல் மதுரை;]

20. மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு

சென்னை மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு 1-8-48 இல் சென்னை மெமோரியல் மண்டபத்தில், பேராசிரியர் C. இலக்குவனார் எம்.ஓ.எல். அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுக்கு மாகாணம் முழுவதிலுமுள்ள மாணவர்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர். தலைவர் பெரியார் அவர்களும், தாய்மார்கள் பலரும் மாநாட்டுக்கு வந்த மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

தோழர் கோ.மோ. சனார்த்தனம் பி.ஏ; அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

பின்னர், மாநாட்டைத் தலைவர் தோழர் இலக்குவனார் அவர்கள், தம்முடைய தலைமையுரையை விளக்கமாகவும் விரிவாகவும் மாணவர்களுக்கு எழுச்சியூட்டும் முறையில் பேசினார். அடுத்தபடியாகத் தலைவர் பெரியார் அவர்கள் மாணவர்களுக்கு எழுச்சியூட்டும் முறையில் விளக்கமாகப் பேசியபின், மாணவத் தோழர்கள் சுப்பய்யா, - வஞ்சிக்கோ, அப்துல்காதர், ஆகியோர் உணர்ச்சி ததும்பப் பேசினர்.

பின்னர், தோழர்கள், குருசாமி, பி.ஏ; குஞ்சிதம் - குருசாமி பி.ஏ; எல்.டி; டாக்டர் தருமாம்பாளம்மையார், எஸ். ஜி. பாலசுப்பிரமணியம். ஏ.பி. சனார்த்தனம், ஆர். இளம்வழுதி, இரா. நெடுஞ்செழியன், டாக்டர் கிருட்டினசாமி, க.அன்பழகன், அண்ணாதுரை ஆகியோர் பேசியதும், தோழர் ஏ.எஸ். வேணு அவர்களின் நன்றியுரையுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

1952ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல்பொதுத்தேர்தலில் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதிக்குப் பெருந்தலைவர் காமராசரும் சி.டி.நாயுடு என அழைக்கப்பெறும் அறிவியல் அறிஞர் கோ.துரைசாமி அவர்களும் போட்டியிட்டனர். பெருந்தலைவர் தமிழ்நாட்டை வழிநடத்தவேண்டும் எனக் கூறிய பேராசிரியர், அறிவியல் அறிஞர் நாடாளுமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவது நாட்டிற்கே நலம்பயக்கும் என அவருக்காக முனைப்பான பரப்புரை மேற்கொண்டார். சட்டமன்றத்தேர்தலில் போட்டியிட்ட கல்லூரிச்செயலர் திரு வே.வ.இராமசாமி அவர்களும் கூட்டாதரவு முறையில் அறிவியல்அறிஞரையே ஆதரித்தார். ஆனால், தேர்தல் முடிந்ததும் நாடார்கல்லூரியில் பணியாற்றிக்கொண்டே நாடார்தலைவரை எதிர்ப்பதா எனக் கருதிய கல்லூரி ஆட்சிக்குழு பேராசிரியரைப் பணியில்இருந்து நீக்கியது.

’எனதுஉளக்கருத்திற்கேற்பப்பெரியார்அவர்கள்திராவிடர்கழகமாநாட்டுகளுடன்திருக்குறள்மாநாடுகளையும்நடத்தினார்கள்.இத்திருக்குறள்மாநாடுகளில்எனக்குச்சிறப்புப்பங்கும்பணியும்அளித்தனர்.

பெரியார் அவர்களால் சென்னையில் நடத்தப்பட்ட திருக்குறள் மாநாட்டுக்குச் சொற்பொழிவாளராகவும் இந்தி எதிர்ப்பு மாணவர் மாநாட்டுக்குத் தலைவராகவும் சென்றுவந்துள்ளேன்.

உள்ளூர்ப் பேராயக் கட்சியினர் என்னுடைய தொண்டினைக் காரணமின்றி வெறுக்கத் தொடங்கிவிட்டனர். உள்ளூர்ச்சுவர்களில் “இலக்குவனாரே! உசார்,! எச்சரிக்கை” என்றெல்லாம் எழுதிவைத்தனர். நகரில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் என்னைப் பற்றித் தாக்கிப் பேசினர்.

அரசினர்க்கு என் இந்திவெறுப்பைச் சுட்டிக் காட்டியும், திருக்குறள் வகுப்பில் அரசைத் தாக்கிப் பேசுவதாகக் கதைகட்டியும் கடிதங்கள் எழுதினர். அரசினரும் அலுவலர்களை அனுப்பி ஆராயவைத்தனர். அப்பொழுது கல்வி அமைச்சராயிருந்தவர் அக் கல்லூரிக்கு வந்தஞான்று என்னைக் கல்லூரியை விட்டுவிலக்கவும் அறிவுரை கூறினார். “நாங்கள் அவரை விலக்கமாட்டோம்; விரும்பினால் நீங்கள் விலக்கிவிடுங்கள்”என்று மொழிந்துவிட்டனர் கல்லூரிப்பொறுப்பாளர்கள். யான் இந்தியை எதிர்ப்பதாகச் சட்டமன்றத்தில் என்னைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டன. அரசு என்னைக் கல்லூரியிலிருந்து அகற்றத் திட்டமிட்டது.’’

தமிழ்ப் போராளி இலக்குவனார்

தமிழர் தலைவர் கி.வீரமணி,

பேராசிரியர் சி.இலக்குவனார் தமிழறிஞர்கள் வரிசையில் தனித்தன்மையானவர். தான் படித்த படிப்பு, சம்பாத்தியம் குடும்ப வளமைக்கு மட்டுமே என்னும் கண்ணோட்டம் அவருக்கு இருந்திருந்தால் அவர் வாழ்க்கை என்பது இவ்வளவுத் தொடர் தொல்லைகளுக்கும், அலைச்சலுக்கும் ஆளாகி இருக்காது. இலக்குவனார், தஞ்சாவூர் மாவட்டம் வாய் மேடு என்னும் கிராமத்தில் சிங்காரவேலர்-ரத்தினம் அம்மையார் ஆகியோரை பெற்றோராகக் கொண்டு எளிய குடும்பத்தில் 17-11-1909 அன்று பிறந்தார். உள்ளூர் தொடக்கப்பள்ளியில் படித்த அவர் பி.ஓ.எல். மற்றும் முதுகலைப் பட்டங்களையும் பெற்றார்.

19/12/2009-இல் அண்ணாநகர் தமிழ்ச்சங்கம், இலக்குவனார் இலக்கியப்பேரவை, இலக்கியவீதி இணைந்து நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனார் நூற்றாண்டு விழாவில் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் நூறு தமிழ்ச்சான்றோர்களுக்கு ‘இலக்குவனார் விருது’ வழங்கிச் சிறப்பித்தார்அவருடைய முயற்சியால்>>

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்றுத்தேர்ந்தவர். ‘தமிழர் தலைவர்’ நூலை எழுதிய சாமி.சிதம்பரனாரின் மாணவர் ஆவார். தொல்காப்பியத்தை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் என்பது அசாதாரணமானது. மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் அண்ணா, போப் ஆண்டவரை சந்தித்த போதும், யேல் பல்கலைக்கழகத்துக்கு சென்ற போதும், அந்நூலை நினைவுப் பரிசாக அளித்தார்.

எழிலரசி உள்ளிட்ட கவிதை நூல்கள், தமிழ்க் கற்பிக்கும் முறை, அமைச்சர் யார், தொல்காப்பிய ஆராய்ச்சிகள், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், வள்ளுவர் வகுத்த அரசியல் உள்ளிட்ட ஆய்வு நூல்கள், என் வாழ்க்கைப்போர், கருமவீரர் காமராசர் எனும் வரலாற்று நூல்கள்.

>>பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் **‘இலக்குவனார் அறக்கட்டளை’**நிறுவப்பட்டது.படத்தில் காணும் சிலம்பொலியாருடன், நீதியரசர் அரு.இலக்குமணன், வா.செ.குழந்தைசாமி, பேராசிரியர் கண.சிற்சபேசன், வா.மு.சேதுராமன்,ஈரோடு தமிழன்பன் என விருதுபெற்ற நூறு பெருந்தகைகள் விவரம் அடுத்த இதழில் வெளிவரும்.

திருக்குறள் எளிய பொழிப்புரை, தொல்காப்பிய விளக்கம், தொல்காப்பிய எழுத்ததிகாரம் உள்ளிட்ட உரை நூல்கள் மற்றும் தொல்காப்பியம் உள்ளிட்ட ஒன்பது ஆங்கில அரிய நூல்கள் வாழும்வரை, அவற்றை படைத்த பேராசிரியர் இலக்குவனாரும் நாட்டு மக்களின் இதயங்களில் கோலோச்சுவார். சங்க இலக்கியம், குறள் நெறி, திராவிடக் கூட்டரசு உள்ளிட்ட ஏடுகளின் ஆசிரியராக இருந்ததோடு, திராவிடன் பெடரேசன் என்ற ஆங்கில இதழையும் நடத்தியுள்ளார். இவற்றையெல்லாம் அவர் நடத்தினார் என்றாலும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில், தன் கையைச் சுட்டுக் கொண்டார் என்றே கூற வேண்டும். ஆனாலும் இனம், மொழி மேம்பாட்டுக்கான மேட்டிமை அவரை ஆட்கொண்டது. அவர் தமிழாசிரியராக, விரிவுரையாளராக,

பேராசிரியராக, துறைத்தலைவராகப் பரிணமித்தவர். திருவாரூரில் தமிழாசிரியராக பணியாற்றிய போது அவரின் மாணவராக இருந்தவர்தான் மு.கருணாநிதி (பிற்காலத்தில் முதல்-அமைச்சர் கலைஞர்). ‘தமிழ் உணர்வுடன் சுயமரியாதைப் பண்பையும் எனக்கு ஊட்டியவர் இலக்குவனார்’ என்று ‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார். திருவாரூரிலிருந்து தொடங்கி குலசேகரன்பட்டினம், நெல்லை ம.தி.தா. இந்துக்கல்லூரி, விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி, ஈரோடு மகாஜனக் கல்லூரி, மதுரை தியாகராயர் கல்லூரி, நாகர்கோவில், சென்னை மாநிலக் கல்லூரி, ஆந்திராவின் உஸ்மானிய பல்கலைக்கழகம் வரை (1936-1968 இடைவெளியில்) பந்தாடப்பட்டவர். அந்த வகையில் தமிழ்நாட்டின் மண்ணை அளந்த மணவாளர் அவர்! என்ன காரணம்? பணியில் தொய்வா? திறமைக் குறைவா? அல்ல அல்ல. சென்ற இடங்களில் எல்லாம் அவர் வகித்த துறையில் முத்திரை பதித்தவர். தமிழ் உணர்வோடு மாணவர்களை வார்த்தெடுத்தவர். அவருடைய மாணவர்களுள் ஒருவர்தான் ஆர்.நல்லக்கண்ணு; பின் ஏனிந்தப் பந்தாட்டம்? அவர் தமிழ் உணர்வாளர், இன உணர்வாளர், பெரியார் வழி சுயமரியாதைக்காரர். இவைதான் இவர் மீது ஏவப்பட்ட அம்புகள். ஒரு கல்லூரியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டதற்கு சொல்லப்பட்ட காரணம் தெரியுமா? பெரியார் நடத்திய திருக்குறள் மாநாட்டிலும், இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும் பங்கு கொண்டார். இலக்குவனார் கருஞ்சட்டை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டி வருகிறார் என்று பொதுக்கல்வி இயக்குநர், ஆட்சிக்குழுவுக்கு தாக்கல் செய்தது. ஆட்சி மன்றக்குழுவின் கருத்து இதற்கு எதிராக இருந்தாலும் வேறு வழியின்றி இலக்குவனாரை வெளியேற்ற நேர்ந்தது. அந்த கல்லூரியில் அவருக்கு இழைத்த அநீதி கண்டு ‘துரத்தப்பட்டேன்’ என்று கவிதை வரிகளில் குமுறினார்! கல்லூரிப் பேராசிரியர்கள் சார்பாக சென்னைப் பல்கலைக்கழகத்தின் அகாடமிக் கவுன்சில் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் துணைத் தலைவராகவும், தமிழகப் புலவர் குழுச் செயலாளராகவும் பொறுப்பேற்று செயப்பேரிகை கொட்டியவர். இந்தி எதிர்ப்புப் போராலும், தமிழ் உணர்வு பெரு நடைப் பயணத்தாலும் சிறைவாசமும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தனிமைச் சிறையும் பதவி இழப்பும் தான் அவர் பெற்ற பரிசுகள். தமிழ்நாட்டில் கல்லூரி முதல்வர்கள் குறைந்த அளவேனும் தமிழ்ப்புலமை பெற்றிருக்க வேண்டும். கல்லூரிப் பாடத்திட்டத்தில் தமிழே முதற்பாட மொழியாகவும் ஏனைய மொழிகள் இரண்டாம் பொது மொழியாகவும் இருக்க வேண்டும். தமிழ்ப் பாடத்தேர்வில் திருக்குறளுக்கென்றே தனித்தேர்வுத்தாள் இருக்க வேண்டும் என்பது இலக்குவனாரின் கல்விக் கொள்கை. பணியில் இருந்து ஓய்வுபெற்ற நிலையில் தி.மு.க. பிரிந்தபோது பெரியார் மேற்கொண்ட நீண்ட சுற்றுப்பயணம் முழுவதிலும் திராவிடர் கழக கூட்டங்களில் இலக்குவனாரும் அவருடன் பயணித்து உரையாற்றினார். புதுக்கோட்டையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் (9-4-1950) புலவர் இலக்குவனார் திருவள்ளுவர் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். ‘ஆரியத்தை முதலாவது எதிர்த்த புரட்சிப் புலவர் திருவள்ளுவர். மக்களின் வாழ்வுக்கேற்ற அறம், பொருள், இல்லறம் பற்றித்தான் வள்ளுவர் எழுதினாரே ஒழிய, ஆரியக் கருத்துப்படி இருக்கும் வீட்டைப்பற்றி (மோட்சம்) பற்றி எழுதவில்லை’ என்று பேசினார். இலக்குவனார் பெயரில் அவர் பிறந்த வாய்மேடு உயர்நிலைப் பள்ளிக்கு அவர் பெயரே சூட்டப்பட்டுள்ளது. தன்மானப் புலவர் பேராசிரியர் இலக்குவனாருக்கு 6 மகன்களும், 5 மகள்களும் உண்டு. ‘தமிழகத்தின் உரிமை உணர்வுக்கும் தமிழ்மொழியின் உயர்வுக்கும் உழைப்பதே எனது உறு கடனாம் என்று உறுதி கொள்ளச்செய்தது; தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப் போர் என்னும் குறிக்கோளை வாழ்வின் உயிரென ஏற்றுக் கொண்டேன். புலவர் படிப்பால் பெற்ற பயன் இதுவேயாகும்’

என்பது இலக்குவனார் இலக்கு. அந்தத் தமிழ்ச்சிங்கம் 3-9-1973 அன்று கண் மூடிற்று. என்றாலும் வரலாற்றில் வாழுகிறது! – முதுமுனைவர்கி.வீரமணி, தலைவர், திராவிடர் கழகம்

இலக்குவனார் வணங்கும் கடவுள்

சங்கநிதிபதுமநிதிஇரண்டும்தந்து
தரணியொடு வானாளத்தருவரேனும்
மங்குவார்அவர்செல்வம் மதிப்பேம் அல்லேம்
மா(த்) தமிழுக்கே அன்பர்அல்லராகில்!
எங்குமுள இடமெலாம் சுற்றி ஓடி
இரந்துண்ணும் இழிவாழ்க்கை உடையரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர்அன்பராகில்
அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே!
-----பேராசிரியர் சி.இலக்குவனார்

ஆசிரியர்கி.வீரமணி அவர்கள் மாணவப் பருவத்தில் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்துக்குத் திருவள்ளுவர் திருநாள் விழாவுக்குப் பேராசிரியரைச் சிறப்புவிருந்தினராக அழைத்த தருணம்

இன்றமிழ் காமின்

இலக்குவனார் வேண்டுகோள்

பொன்னும் பொருளும் புவியும் புகழும்
புன்னுறு செல்வம் அனைத்தும் பாரில்
பெற்றுள தமிழர் சற்றும் தமிழினை
எண்ணிப் போற்றாதிருப்பரேல் எல்லாம்
கொன்னேகழியகூற்றுக்கொருநாள்
நல்லிரையாகி நடுங்கி மறைவர்.
இன்தமிழ் எம்மொழி என்னும் நினைப்பால்
உள்ளம் மகிழார் உயிருடையரேனும்
நடைப்பிணமாக நாளைக்கழிப்பரே.
ஆதலின்
நற்றமிழ்மாந்தரே நாடு வணங்கிட
தமிழ்ப்புகழ் பரப்புமின்! தந்நலம் அகற்றுமின்!
பிறரைக் கெடுக்கும் பேதைமை ஒழிமின்!
வளவிய வான்பெருஞ்செல்வமும் பதவியும்
நில்லாவென்பதை நினைவில் கொண்மின்!
அஞ்சிவாழும் அவலம் போக்குமின்!
கரந்தவாழ்வு கடவுள் முனின்றென
எல்லாம் அளித்தும் இன்தமிழ் காமின்!
-குறள்நெறி 15.08.1965



பேராசிரியரின் தமிழ் உரிமைப்பெருநடைப் பயணமும்

பக்தவத்சலனார் பரிசாக வழங்கிய
வேலூர் வெங்கொடுமைச் சிறையும்

சிறைமீண்ட செந்தமிழ்ச் சிங்கத்திற்கு அனைத்துக்கல்லூரி
மாணவர்கள் நடத்திய 55-ஆம் பிறந்தநாள்விழாவில்
அறிஞர் அண்ணா உரையாற்றும் காட்சி

தமிழ் வளர்த்த வள்ளல் இலக்குவனார்

கவிக்கோ அப்துல் இரகுமான்

இலக்குவனார்-----

தமிழ்மயில் வடக்குக் குளிரால்

நடுங்கிக் கொண்டிருந்தபோது

உணர்ச்சி நெருப்பால் நெய்த

உரிமைவேட்கை ஆடையை அணிந்த

பேகன் !

தமிழ்முல்லை தரையில் பட்டுப் போகாமல்

தன்னையே பற்றுக்கோடாக்கி

நிமிர்ந்தோங்கச் செய்த பாரி!

தமிழ்ப்புலவர் ஒருவரின் வறுமை நீங்கத்

தலை கொடுக்க முன்வந்தான் குமணன்!

தமிழின் அடிமைத்தளை நீங்கத்

தன்னையே வழங்கிய குமணன்

இலக்குவனார்!!

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இலக்குவனார் நூற்றாண்டு விழா-26/11/2009 பாட்டரங்கத் தலைமையேற்று கவிக்கோ அப்துல் இரகுமான் (இலக்குவனாரின் மாணவர்) வழங்கிய கவிதை

பேராசிரியர் இலக்குவனார் அறிக்கை!

சென்னை, ஜன. 10

சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் இன்று திரு. க. சந்தானம் 'தமிழின் எதிர்காலம்' என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படித்தார். அக்கட்டுரைக் கருத்துக்கள் யாவும் காலத்திற்கு ஒவ்வாதனவாகவும், தவறான கருத்துக்களை உடையனவாகவும் இருந்தன. அவருக்கு மொழியியல் தொடர்போ, இலக்கிய ஆராய்ச்சித் திறனோ, அல்லது கல்லூரிகளின் தமிழின் நிலைபற்றி அறிந்துள்ள தகுதியோ எதுவும் இல்லை என்பதை அவருடைய கட்டுரை வெளிப்படுத்தியது. ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு எத்துணையும் பொருத்தமில்லாத [illegible] [illegible]—

இக்கட்டுரையை ஆராய்ச்சிக் கருத்தரங்கினர் படித்தற்குரிய கட்டுரையாக ஏற்றுக் கொண்டது மிகமிக வருந்துதற்குரியது. தமிழையும் தமிழரையும் இழிவுபடுத்தும் இக்கட்டுரைக்கு இடம் தந்தவர்கள், பல தமிழ்ப் பேராசிரியர்களின் கட்டுரைக்கு இடம் அளிக்காததிலிருந்து ஆராய்ச்சிக் கருத்தரங்கப் பொறுப்பாளர்கள் தமிழுக்கு நலம் சேர்க்கும் வகையில் கருத்தரங்கை நடத்திச் செல்லவில்லை என்று தெரிகிறது. ஆகவே தமிழக அரசு உடனடியாக இவ்வாராய்ச்சிக் கருத்தரங்கக் குழுவைத் திருத்தியமைத்து தக்க முறையில் நடைபெறச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

மலேசியாவுக்குத் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்கள் அழைப்பையேற்றுத் தமிழ்ப்பொழிவுகள் ஆற்றச் சென்றவேளையில்

தமிழ் எழுத்து தோன்றியது எப்போது?

கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு இலக்குவனார் மறுப்பு

சென்னை, ஜன. 6

உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி சென்னை நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற இன்றைய தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் திரு. ஐராவதம் மகாதேவன் என்பவர் "சங்ககாலத்தில் தமிழ் பிராமி கல்வெட்டுக்கள்" என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று படித்தபோது முதல்முதலாக கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தான் பிராமி எழுத்தைப் பின்பற்றி தமிழ் எழுத்து மொழியாயிற்று என்று கூறியதை டாக்டர், சி. இலக்குவனார் மறுத்தார்.

டாக்டர் இலக்குவனார் கூறியதாவது:—

"கி. மு. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்று கருதப்படும் தொல்காப்பியம் என்ற நூல் நமக்குக் கிடைத்துள்ளது. அக்காலத்திலேயே தெளிந்த ஒலி முறைப்படி தமிழுக்கு எழுத்துக்கள் அமைந்துள்ளன என்பதை அறியலாம். அவரே "எழுத்தெனப்படுப அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப" என்று கூறியுள்ளார்.

உயிரெழுத்தின் வடிவங்களைப் பற்றியும் மெய்யெழுத்தின் வடிவங்களைப் பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது. மெய்யெழுத்துக்கள் அப்போதே புள்ளி பெற்று எழுதப்பட்டுள்ளன.

மெய்யெழுத்துக்களை அவர் புள்ளி எழுத்துக்கள் என்றும் அழைக்கிறார். மெய்யெழுத்துக்கள் சேரும் முறை பற்றிய இயலுக்கு 'புள்ளி மயங்கியல்' என்று பெயரிட்டுள்ளார். ஆக எழுத்துக்கள் புள்ளி பெறுவது கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வழக்கில் வந்துள்ளது.

அன்றியும் இப்போது நாம் கண்டாலும் எழுத்துக்கள் தொல்காப்பியத்துக்கு முன்பிருந்தே வருவனவாகும். ஆசிரியர் வழி மாணவர்களும், பெற்றோர் வழி மக்களும் இவ்வரிவடிவங்களைக் கற்று இந்நாள்வரை பெற்றுள்ளோம்.

கல்வெட்டுக்களின் காலம் பழுவது போல் வரிவடிவங்கள் மாறி வந்திருக்குமேல் இலக்கிய மரபு தொடர்ந்து வந்திருக்காது.

கல்வெட்டுக் எழுத்துக்களைப் பொறித்தவர்கள் கல்லாதவர்களாகவும் அயல்மொழியாளர்களாகவும் இருத்தலால் எழுத்துப் பிழைகளும், சொற்பிழைகளும் கல்வெட்டுகளில் மலிந்துள்ளன. ஆதலின் கல்வெட்டு மொழியை ஆதாரமாகக் கொண்டு மொழியாராய்ச்சி செய்தல் தவறுடைத்தாகும்.

தமிழ் எழுத்துதான் பிராமி எழுத்தாக வந்திருக்குமே தவிர பிராமி எழுத்து தமிழ் எழுத்தாக மாறியிராது.

எனவே தமிழ் தனக்குரிய ஒலிகளுக்கேற்ப செப்பமான வரி வடிவங்களைக் கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே பெற்றுள்ளது என்பதை தொல்காப்பியத்தின் வாயிலாக அறியலாம்.

சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராய்ப் பணியேற்றபோது நடைபெற்ற இலக்கியவிழாவில்